15th November 1961]

Fire accidents in 1961 (Madras City)

* 2100 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) the number of huts and houses and the names of the places where fire-accidents took place in the City of Madras in 1961;

(*b*) whether the Fire Engines have gone there in time; and

(c) whether there is any proposal to open a Fire Engine Station in the neighbourhood of Perambur area?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*), (*b*) & (*c*) : A statement [a] is placed on the table of the House.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் இப்போது இருக்கும்படியான தீயணைக்கும் படை ஆபீஸ்கள் தேவையில்லாத இடங்களில் இருந்துகொண்டிருக்கின்றன. சென்னை நகரத்தை வெவ்வேறு முக்கியமான பகுதிகளாகப் பிரித்து பெரம்பூர், மாதவரம், அய்யனாவரம், செம்பியம் ஆகிய பகுதிகளில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால் இனிமேலாவது யோசனை செய்து அந்த இடங்களில் ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூடிய வரையில் தீ விபத்து தவிர்க்கப்பட்டு வருகிறது. இப்போது கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து இதுவரையில் நடந்த தீ விபத்துக்கள், தடுப்பு நிலையங்களை வைத்துக்கொண்டு அவ்வப்போது தடுக்கப்பட்ட காரணத்தினால் நஷ்டம் ஆனது 40,000 ரூபாய், பாதுகாக்கப்பட்டது 508 ஆயிரம் ரூபாய். இதிலே இன்னும் அதிகமான கவனம் செலுத்தி நஷ்டத்தைத் தவிர்க்க வேண்டியிருக்கிறது. அதற்கு இப்போது இருக்கும் நிலையங்கள் போதாது. அதற்காகத்தான் புதிய நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமாக இரண்டு நிலையங்களை ஒன்றை செம்பியத்திலும், இன்னொன்றை வியாசர்பாடியிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதோடு கோடம்பாக்கம், ராயபுரம், தொண்டையார்பேட்டை போன்ற இடங்களிலும் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்த உத்திரவிடப்பட்டிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : ஸார், பொதுவாக, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில்தான் தீ விபத்துக்கள் ஏற்படும். ஆனால், ஜனவரி. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன் என்று தொடர்ந்தார் போல் ஏற்பட்டிருக்கிறதே, சாதாரணமாக குளிர் காலத்திலும், மழை காலத்திலும்கூட தீ விபத்து உண்டாவதாகச் சொல்லப்படுகிறதே, அதற்கான காரணத்தை சர்க்கார் ஆராய்ந்து செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆராய்ச்சி இல்லாமல் காரணம் சொல்லலாம். தீ விபத்து. அசல் விபத்தாக இருக்காது. கெட்ட பழக்கங்களால் வருகிறது—அஜாக்கிரதையினால் வருகிறது. இதனால்தான் மழை காலத்திலும்கூட வருகிறது.

---

a Printed as Appendix IV on pages 643–646 infra.

[15th November 1961

SRI K. VINAYAKAM: In the matter of establishing a station at Kodambakkam, even the site has been fixed up and it happened to be a Government poramboke land. What happened to that scheme? Would the Government pursue the matter and have it constructed as early as possible?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The hon. Member need not worry about any possible delay.

Milk processing centre

* 2101 Q.—SRI N. K. PALANISAMI:
SRI S. M. ANNAMALAI: } Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to set up milk processing centre; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) The answer[a] is placed on the table of the House.

* 2102 Q.—SRI V. K. KOTHANDARAMAN (On behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether a factory for the production of butter and milk-powder is to be established in the State under the Third Five-Year Plan and

(b) if so, when and where the factory is to be located?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) The matter is under the consideration of the Government.

SRI A. A. RASHEED: May I know whether the Government have received any foreign aid for such plant?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not think so.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: May I know the capacity of this plant and where it is likely to be established?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Madurai and Tiruchi Co-operative Societies have asked for this. Now there is a proposal coming from the private sector. So the Government have to examine and decide whether the private sector could take it up because the allotment under the Third Plan is not adequate for this purpose.

SRI P. S. CHINNADURAI: இந்த தொழிற்சாலையை கூட்டுறவு முறையில் அமைத்தால் நலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கூட்டுறவு முறையில் அமைப்பது என்றால் அரசாங்கமே அந்தச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும். கடனாகவோ, மான்யமாகவோ, ஷேர் காப்பிட்டலாகவோ மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு 15 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு பிளாண்டுக்கே 30 லட்சம் ரூபாய் வேண்டியிருக்கிறது.

---

[a] Printed as Appendix V on page 646 infra.